**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**தேதி: 15/04/2025**

**STC.No. 1214 /2024**

**பெயர் – ராஜ்முகமது த/பெ. முகமது காசிம்**

**குறுக்கு விசாரணை**

என்னுடைய நண்பரிடம் பணம் வாங்கிகொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நண்பரின் பெயரையோ அவரிடமிருந்து நான் எவ்வளவு தொகை வாங்கினேன் என்றும், அவரிடம் வாங்கியதற்காக நான் எந்த ஆவணம் எழுதிக்கொடுத்தேன் என்றும், என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய பணம் எவ்வளவு கொடுத்தேன் என்று என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு பணம் எப்படி கிடைத்தது என்று என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

எதிரியின் மனைவி பெயர் பவானி என்று தெரியுமா என்றால் தெரியாது. 31.12.2022 அன்று மாலை 4.00 மணி அளவில் என்னுடைய வீட்டிற்கு வந்து எதிரி என்னிடம் பணம் வாங்கினார். என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் வேறொரு தேதியில் எதிரி என்னிடம் பணம் வாங்கியதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். இந்த வழக்கு கசோலையில் ்உள்ள தொகையை தவிர எதிரி என்னிடம் வேறு பணம் எதுவும் வாங்கவில்லை என்று என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலும்,

புகாரிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி இதற்கு முன்பு என்னிடம் பணம் வாங்கி திருப்பி கொடுத்துள்ளார். 04.03.2019 அன்று எதிரியின் இடத்தை வாங்குவதற்காக நானும், எதிரியும் ஒரு ஒப்பந்தம் போட்டுக்கொண்டோம் என்றால் சரிதான்.

அப்போது ஒரு தொகையை நான் எதிரிக்கு கொடுத்தேன் என்றாலும், அந்த தொகையை எதிரி ஆன்லைன் மூலமாக என்னிடம்திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் வட்டி தொகையை ஆன்லைன் மூலமாக கொடுத்தார். அசல் தொகையை ரொக்கமாக கொடுத்தார். ஒப்பந்தம் போட்டபோது எதிரி என்னிடம் நிரப்பப்படாத இரண்டு காசோலைகளை கொடுத்தார் என்றால் சரிதான். எதிரி பணத்தை கொடுத்தபிறகு காசோலையை எதிரியிடம் திருப்பி கொடுத்துவிட்டேன். நான் அந்த இரண்டு காசோலைகளையும்எதிரியிடம் திருப்பிகொடுக்கவில்லை என்றாலும், அந்த காசோலைகளில் ஒன்றைத்தான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில்சிதம்பரம் அரசு மருத்துவ கல்லூரியில் எம்.டி. படித்துக்கொண்டிருந்தார் என்றால் சரிதான்.

எதிரிக்கு நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில்எதிரி என்னுடயை வீட்டிற்கு வரவில்லை என்றாலும், என்னிடம் பணம் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. காலாவதி ஆகிய காசோலையை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் என்ன வேலை செய்கிறேன் என்றும், எவ்வளவு வருமானம் வருகிறது என்றும் என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் ஆடு, மாடு மேய்த்து விவசாயம் செய்துவருகிறேன். ஆக்டிங் ட்ரைவராகவும் வேலை செய்கிறேன். எனக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது

என்றும், ஆண்டிற்கு எவ்வளவு வருமானம் வருகிறத என்ற விவரத்தையும் நீதிமன்றத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அடுத்தவர்கள் நிலத்தை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்துவருகிறேன்.

என்னுடைய வங்கி பரிவர்த்தனையை பார்த்தால் எனக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்று தெரியவரும் என்றால் சரிதான். என்னுடைய வருமானத்தை காண்பிப்பதற்காக நான் வங்கி கணக்கு வைத்துள்ள வங்கியின் மேலாளரை விசாரிக்க தயாராக இல்லை. வழக்கு காசோலையில் உள்ள தொகையை கொடுப்பதற்கு எனக்கு வருமானம் எதுவும் இல்லை என்றாலும், எதிரி எனக்கு சொன்னதுபோல் நிலத்தை கொடுக்காததால் ஒப்பந்தத்தின் போது செக்ரிட்டிக்காக கொடுத்த காசோலையை நிரப்பி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. சட்டப்படியான கடனுக்காக காசோலை கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் பணம் வாங்கியதாக சொல்லப்படும் தேதியில் எதிரி பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் மருத்துவராக இருந்தாரா என்றால் அதைபற்றி தெரியாது. எதிரி அரசு மருத்துவர் என்பது தெரியும். ஆனால் எந்த ஊரில் வேலை செய்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

எதிரி என்னிடம் பணம் வாங்கியதாக சொல்லப்படும் தேதியில் எதிரி அரசு மருத்துவராக பணிபுரிந்து மாதம் ரூ.85,000/- சம்பளம் வாங்கினார் என்றாலும், எதிரிக்கு என்னிடம் கடன் வாங்கும் சூழ்நிலை எப்போதும் ஏற்பட்டதில்லை என்றாலும் சரியல்ல. 27.05.2024 அன்று எதிரி என்னை சந்திக்கவில்லை என்றாலும் காசோலையை என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும்,இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும், வழக்கு காசோலை சட்டப்படியாக கடனுக்கு வழங்கப்பட்டது அல்ல என்றாலும், புகாரில் குறிப்பிட்டுள்ள் தேதியில் எதிரி என்னிடம் பணம் வாங்கவில்லை என்றாலும்,

வழக்கு காசோலையை கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. செக்ரிட்டிக்காக எதிரி கொடுத்த காசோலையை நானே தொகையை நிரப்பி எதிரிக்கு முன் அறிவிப்பு எதுவும் கொடுக்காமல் காசோலையை வசூலுக்காக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Sd/-.
Judicial Magistrate No.I,
Perambalur.